இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 85 – ஒலி: 63 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 26 – செவ்வாய்க்கிழமை 13 அக்டோபர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 85 - Issue 63 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 26 - Tuesday 13 October 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட

பூவிருந்தவல்லி - வடபழனி மெட்ரோ ரயில் சேவை தொடங்கியது!

போக்குவரத்து அமைப்பில் மிகப்பெரும் மைல் கல்! பொதுமக்கள் மகிழ்ச்சி!

சென்னை, அக். 13 -

திராவிட மாடல் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட பூவிருந்தவல்லி - வடபழனி இடையேயான மெட்ரோ ரயில் சேவையை ஆறுமாத காலதாமதத்துக்கு பிறகு பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், மு.க.ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த போது தொடங்கப்பட்டது.

சென்னையின் போக்குவரத்து நெரிசலுக்கு மாமருந்தாகவும், பொதுப் போக்குவரத்து அமைப்பில் மிகப் பெரும் மைல்கல்லாகவும் மெட்ரோ ரயில் அமைந்துள்ளது. சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் முடக்கப்பட்டிருந்தது. கடந்த 2021ஆம் ஆண்டு திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன.



மேலாக விடுவிக்கப்படாமல் இருந்தது. கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும், சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டப்பணிகளை

ஒன்றிய மோடி அரசு நிதி நெருக்கடி ஏற்படுத்திய நிலையிலும் மாநில அரசே நிறைவேற்றிய திட்டம்!

மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கான ஒன்றிய அரசின் பங்களிப்பு நிதி மூன்று ஆண்டுகளுக்கும் திராவிட மாடல் அரசு மேற்கொண்டது. இந்நிலையில், தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட பூவிருந்தவல்லி - வடபழனி இடையேயான மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

2025 ஆம் ஆண்டுக்குள் திறந்திட முயற்சி!

பூவிருந்தவல்லி - வடபழனி வழித் தடத்தை 2025 ஆம் ஆண்டு இறுதிக் குள்ளேயே திறந்திட அனைத்து முயற் சிகளையும் திராவிட மாடல் அரசு மேற்கொண்டது. 2025 ஆம் ஆண்டு சிக்னல் அமைப்புக்கான ஒப்பு தலை இரயில்வே வாரி யம் வழங்குவதில் ஏற் பட்ட தாமதத்தால் அது இயலாமல் போனது.

தமிழ்நாட்டில் தேர் தல் நடத்தை விதிமுறை கள் அமலுக்கு வந்ததை யடுத்து, திட்டமிட்டபடி கடந்த ஆட்சிக்காலத்தில் மெட்ரோ ரயில் திட் டத்தை திறந்து வைக்க முடியவில்லை. இந் நிலையில், ஆறுமாத காலதாமதத்துக்கு பிறகு பூவிருந்தவல்லி - வட பழனி இடையேயான மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைத்து அந்த ரயிலில் பிரதமர் மோடி பயணம் செய்தார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும், 2024 செப்டம்பர் நிலவ ரப்படி, மாநில அரசின் சொந்த நிதியிலி ருந்து 11 ஆயிரத்து 762 கோடி ரூபா யும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின்



கடனுதவி மூலம் 6 ஆயிரத்து 802 கோடி என மொத்தம் 18 ஆயிரத்து 564 கோடி ரூபாயைச் செலவிட்டு திராவிட மாடல் அரசில் இரண்டாம் கட்டப் பணிகளை நிறுத்தாமல் தொடர்ந்தோம் என்று குறிப்பிட் டுள்ளார்.

மேலும் பிரதமரால் திறந்து வைக் கப்பட இருக்கும், பூவிருந்தவல்லி - போரூர் - வடபழனி வழித்தடத்தை ஒருவழியாகச் சென்னை மக்கள் ஆவ லோடு எதிர்பார்த்திருந்த இந்த வழித் தடம் பயன்பாட்டுக்கு வர இருப்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியும் மன நிறைவும் கொள்கிறேன் என்றும் ஆண்டுக்கணக்கில் நான் சுமந்து வளர்த்தெடுத்த சென்னை மெட்ரோ இரயில் எனும் குழந்தை அடியெடுத்து வைப்பதில் தாய்மை உணர்வு டன் பெருமை கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை வள்ளுவர் கோட் டம் வரலாற்றை போன்று சென்னை மெட்ரோ இரயில் நிறைவேற்றத்திலும் தி.மு.க. அரசின் இடம் சரித்திரத்தில் எவ ராலும் மறைக்க முடியாத இட மாக நிலைபெற்றிருக்கும். சென்னை மெட்ரோ இரயில் மட்டுமல்ல, சென்னை மாநக ரில் காணும் உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்கள் எல்லா வற்றிலும் தி.மு.க அரசின் பெயர்தான் இருக்கும்.

தி.மு.க. ஆட்சிக் காலங் களில்தான் நவீன தமிழ்நாடு கட்டியெழுப்பப்பட்டது என் பதை ஒவ்வொரு மாவட்டத் திலும் உயர்ந்து நிற்கும் வளர்ச்சிச் சின்னங்கள் பறைசாற்றும் என்றும் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் போராட்டத்தைத் தடுக்க முயற்சி! காவல்துறை

அதிகாரிகள் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கூடாது?

ஒன்றிய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, அக். 13 -

டெல்லி மாணவர்கள் போராட்டம் தொடர் பான நீதிமன்ற அவம திப்பு வழக்கில் ஒன்றிய அரசு விரிவான பிரமா ணப் பத்திரம் தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்கு மார் பதவி விலகக் கோரி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மற்றும் மாண வர்கள் நேற்று டெல்லி ஜந்தர் மந்தரில் போராட் டத்தில் ஈடுபட்டனர். இந் தப் போராட்டத்தை தடுத்து நிறுத்துவதற்காக, டெல்லி அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டது.

மெட்ரோ ரயில் நிலை யங்கள் மூடப்பட்டன. முக்கிய சாலைகளில் பொதுமக்களுக்கு அனு மதி மறுக்கப்பட்டது. இணையதள சேவைகள் முடக்கப்பட்டன. இது தொடர்பான வழக்கை நேற்று விசாரித்த உச்சநீதி மன்றம், மக்களை பாதிக் காத வகையில் மெட்ரோ ரயில் நிலையங்களை திறக்க அறிவுறுத்தியது. ஆனால், உச்சநீதிமன்றத் தின் உத்தரவை டெல்லி அரசு நிறைவேற்றவில்லை.

இதனை எதிர்த்து டெல்லி மற்றும் ஒன்றிய அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு மற்றும் ஆட் கொணர்வு மனுக்கள் உச் சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் விடுமுறை தின மான இன்று நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்சி மற் றும் வி. மோகனா ஆகி யோர் அடங்கிய சிறப்பு அமர்வு முன் விசார ணைக்கு வந்தது. மனுதார் கள் தரப்பில் மூத்த வழக் கறிஞர்கள் கபில் சிபல், கே.கே. வேணுகோபால், மேனகா குருசாமி, கோபால் சங்கர நாராய ணன் உள்ளிட்டோரும், ஒன்றிய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவும் ஆஜ ராகினர்.

முன்னாள் முதல்வர் கள் கெஜ்ரிவால், மம்தா பானர்ஜி, பினராயி விஜ யன் உள்ளிட்ட தலைவர் கள் மற்றும் 7 ஆயிரத்திற் கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதாக மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித் தனர். அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், உத்தரவை செயல்படுத்த தவறிய அதி காரிகள் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கூடாது என கேள்வி எழுப்பினர்.

டெல்லி மாணவர்கள் போராட்டத்தின் போது டெல்லி அரசு மற்றும் போலீசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய உள்துறை செய லாளர், டெல்லி காவல் ஆணையர், டெல்லி மெட்ரோ ரயில் நிறுவன தலைவர் ஆகியோர் பிர மாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட் டனர்.

சட்டம் ஒழுங்கு தொடர்பான சூழல் ஏதும் எழாதவரை மெட்ரோ ரயில் சேவை இயல்பு நிலையில் செயல்பட வேண்டும், பொதுமக்க ளின் தடையற்ற நடமாட் டம் மற்றும் இணைய சேவை ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்ட நீதி பதிகள், வழக்கறிஞர்கள் தங்கள் தொழில்முறைப் பணிகளை மேற்கொள்வ தில் எவ்விதத் தடையும் செய்யக்கூடாது என்றும் தெரிவித்து, விசார ணையை ஒத்திவைத் தனர்.

செயலற்ற டம்மி முதல்வரின் த.வெ.க. ஆட்சியில்

அரிசி விலை கடும் உயர்வு!

கிலோ ரூ.20 முதல் ரூ.27 வரை அதிகரிப்பு!

சென்னை, அக்.13 -

தமிழ்நாட்டில் அரிசி விலை கிடுகிடுவென உயர்ந்து கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.27 வரை அதிகரித்துள்ளது. அரிசி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

கிடுகிடு உயர்வு

தமிழ்நாட்டில் அரிசி விலை கடந்த சில மாதங்களாக கிடு கிடு வென உயர்ந்து வருகி றது. கடந்த ஜூலை மாதம் விற்பனை செய் யப்பட்ட 26 கிலோ எடை கொண்ட அரிசி பைகள் ரகத்திற்கு ஏற்ப ரூ.300 முதல் ரூ.600 வரை அதிகரித்து உள் ளது.

தமிழ்நாட்டுக்கு தேவையான அரிசி காவிரி டெல்டா மாவட்டங்கள், மதுரை, விழுப்புரம், விக்கிரவாண்டி, சேலம், கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, கர் நாடகா, மேற்கு வங்கா ளம் போன்ற அண்டை மாநிலங்களில் இருந் தும் கொண்டு வரப் பட்டு விற்பனை செய் யப்பட்டு வருகின்றன.

26 கிலோ பை

இந்த நிலையில், புழுங்கல் பொன்னி அரிசி, பச்சை அரிசி, நீராவி மூலம் அரை வேக்காடு பக்குவத்தில் தயாரிக்கப்படும் புழுங் கல் அரிசி (ஸ்டீம் அரிசி) போன்ற அரிசி கள் குறிப்பாக அதிகள வில் விலை உயர்ந்துள் ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, சென் னையில் விற்பனை செய்யப்படும் 26 கிலோ எடை கொண்ட பை அரிசி விலை விவரம்:

புழுங்கல் பொன்னி அரிசி 1,900, ஆர். பொன்னி அரிசி ரூ.1,700, சோனா மசூரி பச்சரிசி 2,000 1,800, மதி அரிசி (30 கிலோ) ரூ.3,800, சிவாஜி அரிசி (25) 2,000.

மேற்கண்ட 26 கிலோ எடை கொண்ட அரிசி பைகளின் விலை நிலவ ரப்படி ஒரு கிலோவுக்கு சில்லறை விலை ரூ.20ல் இருந்து ரூ.27 வரை உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரிசி விலையேற்றம் குறித்து சென்னை கொத்தவால்சாவடி அரிசி வியாபாரி சங் கரலிங்கநாதன் கூறும் போது,

"தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்க ளான ஆந்திரா, கர்நாடகா, மேற்குவங் காளம் போன்ற மாநி லங்களிலும் போது மான மழை இல்லாத தால் நெல் விளைச்சல் குறைந்து அரிசி விலை ஏறி வருகிறது.

அதேபோன்று, இந் தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதியும் தற்போது தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இங்கு ரூபாயில் அரி சியை வாங்கி டாலரில் விற்று அதிகளவில் பணம் சம்பாதிக்கின்ற னர் என்றார்.